# 3.6 தேவ இராஜ்யத்தைக் கட்டுதல்

**வேத வசனம்:** முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத்தேயு 6:33

**அறிக்கை:**
நான் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டவும் இயேசுவை இராஜாவாக அனுமதிக்கவும் வேண்டும்

**சத்தியம்:** மனிதனுக்கானத் தேவனுடைய இரட்சிப்பு அவனை இருளின் வல்லமையில் இருந்து விடுதலையாக்கி அவருடைய மகிமை யுள்ள இராஜ்யத்திற்குள் கொண்டு வருகிறது.

## ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *பரலோகம் என்றால் என்ன?*
- *அதை நாம் இப்போது காண முடியுமா?*
- *நாம் பரலோக இராஜ்யத்தை உலகத்தில் கட்டுவது எவ்வாறு? (ரோ. 14:17-19)*

## பாடக்குறிப்புகள்
- **நமது வாழ்விற்கானத் தேவனுடையச் சித்தம்** - *கொலோ 1:9-14*
- **அழிக்க அல்ல, கட்ட** -*1 யோவான் 4:8, மாற் 1:40-41*
- **பரலோக இராஜ்யத்தைக் கட்ட** - *மத். 3:1-3, 9:35-36*
- **அதிக சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற** - *மத். 6:33, சங். 16:37*

**வேதப்பகுதி**
*மத்தேயு 6:25-34*

**பெருகும் அன்பு:** தேவனுடைய இராஜ்யம் அவருடைய மக்களின் இருதயத்தில் இருப்பதால் அதனைக் கண்களால் பார்க்க முடிகிறதில்லை. எப்பொழுது ஒருவர் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறாரோ அப்பொழுது அவர் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமகன்/மகள் ஆகிறார். இயேசு அனைவரையும் இரட்சிப்பதற்காகவே வந்தார். நாம் தேவ அன்பைப் பிறரிடம் காட்டும்போது தேவனுடைய இராஜ்யம் கட்டப்படுவதோடு நாமும் பெலப்படுகிறோம். இந்தச் சங்கிலியின் ஒவ்வொரு இணைப்பிலும் உங்கள் நண்பர் அல்லது நீங்கள் நேசிக்கும் ஒருவரின் பெயரை எழுதவும். அவர்களுக்குத் தேவனுடைய அன்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று சிந்திக்கவும்.

**சிந்திக்க:**
*உலகத்தின் இடையூறுகள் தேவனுடைய வேலையைச் செய்ய உங்களை எவ்வாறு தடை செய்கிறது?*

______________________________

______________________________

**ஜெபம்:**
*உங்கள் வார்த்தைகளைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள். அவை பிறரை உருவாக்க மட்டுமேயன்றி கிழிக்க பயன்படுத்தப்போவதில்லை என்று முடிவெடுங்கள்*

______________________________

______________________________

**செயல்**
தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்ட உங்களுக்கு உதவுமாறு தேவனை வேண்டி ஒரு ஜெபத்தை எழுது கீழ்க்கண்ட இடத்தைப் பயன்படுத்தவும்.